கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒரு மாநிலக் கட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு தேர்தல் தோல்விக்கே இன்றைக்குப் பல கட்சிகள் காணாமல் போயிருக்கிறது. ஆனால் 75 ஆண்டு காலம் கொண்ட கொள்கைக்காக லட்சியத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் கட்சி; ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மக்களுக்காகப் பாடுபடும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். அந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் இன்றைக்கு எத்தனையோ பேர் வந்து கொண்டிருக்கிறார்கள்.

செய்திகளாக வரும் அக்கிரமங்கள்!

இன்றைக்கு இருக்கும் ஆட்சியைப் பற்றி சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். சோசியல் மீடியா இன்றைக்கு எந்த அளவுக்கு பரவிக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். அந்த சோசியல் மீடியா ஒரு அளவுதான்; நாளடைவில் அதெல்லாம் மறைந்து போகத்தான் போகிறது. இன்றைக்கு சோசியல் மீடியாவை பார்க்கிறபோது, 'கோட்' போட்டு வந்தார்; கையில் டிஃபன் கேரியர் எடுத்து வந்தார்; வாட்ச் கட்டி வந்தார்; செஸ் விளையாடினார்; இன்றைக்கு கோட்டு போடவில்லை; பட்டு சட்டை வேஷ்டியில் வந்தார். இதெல்லாம் செய்திகளாக வந்து கொண்டிருந்தன. அவைகள் எல்லாம் மறைந்து, நாட்டில் நடக்கும் அக்கிரமங்கள் எல்லாம் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருப்பவரை பார்த்து நான் கேட்பதெல்லாம், தயவு செய்து இன்றைக்கு உங்களைப் பற்றி, உங்கள் ஆட்சியை பற்றி வரும் செய்திகளைப் படியுங்கள். படித்து, அதில் இருக்கும் உண்மையைக் கண்டுபிடிங்கள். அதற்குரிய நடவடிக்கை எடுங்கள் என்பதுதான் என்னுடைய அன்பான வேண்டுகோள்.

எந்தப் பணியையும் செய்யக்கூடியவர்!

நம்முடைய கலாநிதி வீராசாமி அவர்கள் தம்பி உதயநிதி சொன்னது போன்று, அமைதியானவர்; அடக்கமானவர். எந்தப் பணியைக் கொடுத்தாலும் தட்டாமல் செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டவர். அவர் அமைதியாக எந்தக் காரியத்தையும் செய்யக் கூடியவர். அவருக்கு நான் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து, இன்றைக்கு மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் எல்லா வகையிலும் சிறப்புகளைப் பெற்று, புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், "வீட்டிற்கு விளக்காக.. நாட்டிற்கு தொண்டர்களாக" இருந்து வாழுங்கள், வாழுங்கள், வாழுங்கள் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

கழகப் பொருளாளர், நாடாளுமன்ற மக்களவை தி.மு.க குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள், தனது சகோதரியின் மகன் மறைந்த செந்தில்குமார் திருவுருவப் படத்தினை நேற்று (17.6.2026) மன்னார்குடி, தளிக்கோட்டையில் உள்ள இல்லத்தில் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.இராசமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தலையாமங்களம் பாலு மற்றும் குடும்ப உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில் "ஸ்லீப் மோடு சோபா மாடல்" ஆட்சியில் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு!

தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் அறிக்கை!

மயிலாடுதுறை, ஜூன் 18 - தமிழ்நாட்டில் பெண்கள், பெண் குழந்தைகள், சிறுமிகள் பாலியல் நாளுக்கு நாள் அதிகரித்து உள்ளது "ஸ்லிப் மோடு சோபா மாடல்" முதல்வருக்கு தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் கண்டனம்.

இதுகுறித்து கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு முதல்வராக கவர்ச்சியில் வெத்து வெட்டு வார்த்தைகளின் வழங்கி ஆட்சிக்கு வந்த சோபா மாடல் முதல்வர் விஜய் ஆட்சியில்தமிழ்நாடு இதுவரை கண்டிராத மிகக் கேவலமான சட்டம் ஒழுங்கு சீரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது! பதவி ஏற்று 30 நாட்களுக்குள் தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, பெண்கள், பெண் குழந்தைகள், சிறுமிகள் பாலியல் வன்கொடுமைகள் என நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த பாலியல் வன்கொடுமை ஏழைப் பெற்றோர்களின் வலியும், பச்சிளம் குழந்தைகளின் வேதனையும் உங்களுக்கு உறைக்கவில்லையா? பெத்தவங்களோட குமுறலும், நெஞ்சகப் பதற்றமும் புரியாத ஒரு இரக்கமற்றவர் முதல்வர் நாற்காலியில் அமர்ந்திருப்பது தமிழ்நாட்டின் சாபக்கேடு!, இந்த குற்றங்கள் பற்றிய கவலையும் இல்லை என்பதால் தான், இன்று தமிழ்நாட்டில் காமக்கொடூரர்களும், கொள்ளையர்களும் பயமின்றித் திரிகிறார்கள். தினந்தோறும் பத்திரிக்கை தொலைக்காட்சியில் பாலியல் கொடுமைகளும், கொலை, கொள்ளைகளும் அதிக அளவில் செய்தியாக வருகிறது. சேலத்தில் 50 மேற்பட்ட பெண்களுக்கு தவெக கட்சியைச் சேர்ந்தவர் பாலியல் தொல்லை கொடுத்தது ஆலந்தூரில் அவரது கட்சி பிரமுகர் கணவனை இழந்தபெண்ணிடம் அத்துமீறியது சிங்கப்பெண் படையை உருவாக்கிய சில தினங்களில் சிவகங்கையில் பெண் காவலருக்கே பாலியல் தொல்லை. நாகை கீழ்வேளூர் அருகே இருக்கையில் டிவி பார்த்த பெண்ணின் கழுத்தில் இருந்த தங்க செயினை பறிக்க முயன்ற தவெக பிரமுகர் மரத்தில் கட்டி வைத்து போலீசில் . ஒப்படைப்பு என சட்டம் ஒழுங்கு கழக இளைஞரணி செயலாளர் எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறுவது போல் தமிழ்நாடு முழுக்க சட்டம் - ஒழுங்கு, வெண்டிலேட்டரில் வைக்கும் அளவுக்கு செத்துக் கொண்டிருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டு காலம் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியில் சட்டம் ஒழுங்கை சரியாக பராமரித்து தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உயர்த்தி வந்த நிலையில் தற்பொழுது கவர்ச்சியால், வெத்து வெட்டு பேச்சால் ஆட்சிக்கு வந்த நடிகர் விஜய் இனியாவது சட்டம் ஒழுங்கு பிரச்சனையில் தூங்காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு குறித்து நீதிமன்றங்கள் கண்டனம் தெரிவிக்கும் வகையில் உள்ளது.

கழக தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் டி ஆர் பி ராஜா அறிவுறுத்தியுள்ளபடி கழக தகவல் தொழில்நுட்ப அணியை சேர்ந்தவர்கள் தவெக ஆட்சியின் சட்ட ஒழுங்கை பொதுமக்களுக்கு தெள்ளத் தெளிவாக தெரிவிக்கும் வகையில் சமூக வலைதளங்களில் பதிவிட வேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில்கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் கூறியுள்ளார்.

திருச்சி கிழக்குத் தொகுதியில்

முதல்வர் விஜய் வெற்றியை எதிர்த்து தி.மு.க. வழக்கு!

சென்னை உயர் நீதிமன்றத்தில் இனிகோ இருதயராஜ் மனு!

சென்னை, ஜூன் 18 - திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக த.வெ.க. தலைவர் விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் இனிகோ இருதயராஜ் சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளார். நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிட்ட த.வெ.க. வேட்பாளர் விஜய் தன்னை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளரை விட 27,416 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த நிலையில், அவரது வெற்றியை எதிர்த்து, தி.மு.க. வேட்பாளர் இனிகோ இருதயராஜ் சார்பில் வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் வில்சன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த தேர்தல் வழக்கு மனுவில், 18 வயதுக்கு குறைவான குழந்தைகளை வைத்து விஜய் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். வேட்புமனுவில் வருமான வரி பாக்கி இல்லை எனக் கூறியுள்ளார். வருமான வரி வழக்கு நிலுவையில் உள்ளதை மறைத்துள்ளார்.

அதிகளவில் செலவு செய்து வெளிநாட்டினர் மூலம் பிரசாரம் செய்துள்ளார். கட்சி அடையாளங்களை அணிந்து சென்று முட்டி போட்டு தேவாலயத்தில் பிரசாரம் செய்திருக்கிறார். தேர்தல் செலவு கணக்கு விவரங்களை இது வரை தாக்கல் செய்யவில்லை. ரூட் சமூக வலைதளம் மூலம் பிரசாரத்திற்கு எவ்வளவு செலவு செய்தார் என்ற விவரங்களை இது வரை தெரிவிக்கவில்லை. இதேபோல பல்வேறு முறைகேடுகள் செய்து வெற்றி பெற்றுள்ளதால் அவரது வெற்றியை செல்லாது என்று அறிவிக்க வேண்டும். திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துள்ளதால் தன்னை வெற்றி பெற்றவராக அறிவிக்க வேண்டும். தேர்தல் வழக்கு முடியும் வரை இடைத்தேர்தல் அறிவிக்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

பலாத்காரம் செய்து கொல்லப்பட்ட

சிறுமியின் பெற்றோருக்கு த.வெ.க. எம்.எல்.ஏ. மிரட்டல்!

ஸ்டான்லி மருத்துவமனையில் பரபரப்பு!

சென்னை, ஜூன் 18 - கும்மிடிப்பூண்டி அடுத்த புதுப்பேட்டை கிராமத்தில் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த தம்பதியர் வசிக்கின்றனர். இவர்களது 3 வயது குழந்தையை ஒடிசா மாநிலத்தை சேர்ந்த பிபின் மஞ்சு (19) என்பவன் பாலியல் பலாத்காரம் செய்து கொன்று விட்டு தப்பினான். பின்னர் போலீசார் அவனை கைது செய்தனர்.

இந்நிலையில், ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டு இருந்த சிறுமியின் உடலை பார்க்க, கும்மிடிப்பூண்டி த.வெ.க. எம்.எல்.ஏ. விஜயகுமார் நேரில் வந்தார்.

அவருடன் ஆர்.எம்.ஓ வனிதா மலர் மற்றும் உடற்கூறு ஆய்வு செய்யும் மருத்துவர்கள், காவல்துறையினர் வந்து, குழந்தை சடலத்தை பார்த்துவிட்டு, பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்து விட்டு வெளியே வந்தனர். அப்போது ஜனநாயக மாதர் சங்கத்தினர் மற்றும் தி.மு.க. மகளிர் அணியினர் போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, த.வெ.க. எம்.எல்.ஏ. விஜயகுமார், குழந்தையின் பெற்றோரை தனியாக அழைத்து சென்று மிரட்டியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி, பரபரப்பை ஏற்படுத்தியது. இது குறித்து மாதர் சங்கத்தினர் கூறுகையில், "பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோரை எம்.எல்.ஏ. தனியாக அழைத்து சென்று மிரட்டுகிறார். அவர்களுக்கு பணம் கொடுத்து கையெழுத்து வாங்கி செல்கிறார்கள். எப்படி இதை அனுமதிக்கிறீர்கள். சம்பவத்தை மூடி மறைக்கிறீர்களா, பணம் பட்டுவாடா நடக்கிறதா என்றெல்லாம் கேள்வி எழுகிறது,' என்றனர்.

சிறுமியின் உடற்கூறு ஆய்வை வீடியோ பதிவு செய்ய வேண்டும். தமிழ்நாடு அரசு உரிய இடத்திற்கு உடலை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை பொதுமக்கள் முன்வைத்துள்ளனர். இது தொடர்பாக உங்களது பதில் என்ன என்று த.வெ.க. எம்.எல்.ஏ.விடம் கேட்ட போது, பதில் கூறாமல் காரில் ஏறி சென்றார்.

'திராவிட மாடல்' ஆட்சியில் கொண்டுவரப்பட்ட

கல்வித்திட்டங்களை கேள்விக் குறியாக்கும் த.வெ.க. அரசு!

கழக மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி பேட்டி!

திருப்பூர், ஜூன் 18 - திருப்பூர் மத்திய மாவட்ட கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு

மாவட்ட மாணவர் அணி சார்பில் "நவீன தமிழ் நாட்டின் சிற்பி" என்ற தலைப்பில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் மாபெரும் கருத்தரங்கம் மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் திருப்பூர் தெற்கு மாநகர கழகச் செயலாளர் டி.கே.டி மு.நாகராசன் பகுதி கழக பொறுப்பாளர், மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில்குமார்,

மத்திய மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி, தலைமைக் கழக பேச்சாளர சென்னை எஸ்.கே. ரீராம் கருத்துரையாற்றினர்.

கழக மாணவர் அணி செயலாளர் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி கூறியதாவது : கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான கடந்த திராவிட மாடல் ஆட்சியில் முத்தான முன்னோடி திட்டமான அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டத்தின் மூலமாக நலிவடைந்த மற்றும் பட்டியல் இன ஏழை மாணவ, மாணவியர்கள் வெளி நாடுகளில் உயர்கல்வி பயில முழு செலவையும் ஏற்கும் வகையில் கொண்டு வரப்பட்ட உன்னதமான திட்டம் தற்போதைய தவெக ஆட்சியில் பெரும் கேள்விக்குறியாகியுள்ளது.

கடந்த 2020க்கு முன் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இத்திட்டத்தின்

மூலம் வெறும் 2 நபர்கள் மட்டுமே பயனடைந்த நிலையில், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, விண்ணப்பித்த மாணவர்களை தனிப்பட்ட முறையில் ஊக்குவித்ததன் மூலம் பல கோடி ரூபாய் நிதி உதவியுடன் 386 மாணவ, மாணவியர்கள் பயனடைந்தனர். மேலும், 1000 மாணவ, மாணவியர்கள் வரை வெளி நாட்டுக்கு அனுப்பும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. ஆனால், தற்போதைய தவெக அரசு இத்திட்டத்திற்கான இறுதி தேதியை நீட்டிக்க மறுத்து மாணவர்களை தவிக்கவிட்டு கொண்டுள்ளது.

லண்டன் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸ், ஹார்வர்ட் போன்ற உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களுக்கு ஏழை மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கும் போது, அங்கிருந்து சேர்க்கைக்கான கடிதம் (ஆபர் லெட் டர்) வருவதற்கு ஒரு மாதத்திற்கும் மேலாக ஆகும் என்கிற அடிப்படை தகவல்கள் கூட தெரியாமல், த.வெ.க. அரசு விதித்துள்ள குறுகிய காலக்கெடுவால் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளுக்குச் செல்ல இருக்கும் ஏழை மாணவ, மாணவியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மாணவ, மாணவியர்களின் உயர்கல்வி திட்டத்தை முடக்க நினைக்கும் த.வெ.க. அரசின் செயல்பாடுகளை தி.மு.க. மாணவர் அணி கண்டிக்கிறது.

மும்மொழிக் கொள்கை மற்றும் பல்கலைக் கழகங்களின் அதிகாரத்தை பறிக்கும் விக்ஷித் பாரத் சிக்ஷா அதிஸ்தான் மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வலியுறுத்தி, ஜூன் 23ம் தேதி சென்னை ஆளுநர் மாளிகை அருகில் தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இதில், தமிழக மாணவர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

ஜென்சி டிஎம்கே மீட் அப் நிகழ்ச்சி சென்னையில் இளைஞர்களுக்கு மண்டல பங்கள் கிடைக்காத வகையில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தலையீடு இருந்தால், தி.மு.க. சார்பில் இடவசதி வழங்கப்பட்டது. இது தி.மு.க. நிகழ்ச்சி அல்ல, தன்னெழுச்சியாக இளைஞர்களால் இப்போது மாவட்டம் தோறும் நடைபெற்று வருவது வரவேற்கத்தக்கது என்று கூறினார்.

திருவாரூர் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தில்

இராஜேந்திர சோழன் முடிசூட்டு விழா கருத்தரங்கம்!

திருவாரூர், ஜூன் 18 - தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழக தமிழ்த்துறை மற்றும் சோழமண்டல வரலாற்றுத் தேடல் குழு நடத்திய இராஜேந்திர சோழன் முடிசூட்டு விழா சிறப்பு கருத்தரங்கம் மத்திய பல்கலைக்கழக சோழா மைய நூலக கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

திருவாரூரில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழக தமிழ்த் துறை கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மை பட்டயப் படிப்பு மற்றும் சோழ மண்டல வரலாற்றுத் தேடல் குழு இணைந்து ராஜேந்திர சோழனின் 1012 ஆவது முடி சூட்டு விழாவை 5 ஆம் ஆண்டாக சிறப்பாக நடத்தியது.ஒவ்வொரு ஆண்டும் மத்திய பல்கலைக்கழக கருத்தரங்க கூடத்தில் தொல்லியல் அறிஞர்கள் சோழர் காலத்தில் சோழர்கள் செய்த சாதனை சாதனைகளை மாணவர்கள்,சோழர் வரலாற்று ஆர்வலர்களுக்கு கருத்துகளை பகிர்ந்து ராஜேந்திர சோழனின் சாதனையை எடுத்து ரைப்பர், அதனைத் தொடர்ந்து திருவாரூர் தியாகராஜர் கோயிலில் உள்ள இராஜேந்திர சோழன் பரவை நங்கை சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வர்.

அந்நிகழ்வில், தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் வெ.இரமேஷ்குமார் வரவேற்புரை ஆற்றினார்.

பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் இரா.திருமுருகன் தலைமையுரை ஆற்றினார். பல்கலைக்கழக புல முதன்மையர், பேராசிரியர் ச. இரவி நோக்கவுரை ஆற்றினார். தமிழ்த் துறைத் தலைவர் க.இரமேஷ் வாழ்த்துரை வழங்கினார்.

சோழ மண்டல வரலாற்றுத் தேடல் குழு தலைவர், மருத்துவர் சா. உதயசங்கர் தலைமை ஆய்வுரை நிகழ்த்தினார்.

"சோழர் காலச் செப்புப் பட்டயங்கள்" என்கிற தலைப்பில் சோழமண்டல வரலாற்றுத் தேடல் குழு பொருளார் ஆண்டவர் கனி, "நிலவியல் நோக்கில் கங்கைகொண்ட சோழபுரம்" என்கிற தலைப்பில் பேராசிரியர் முனைவர் ஜெ.ஆர்.சிவராமகிருஷ்ணன்,"

சோழர் கால சாதனைப் பெண்கள்" என்கிற தலைப்பில் சோழமண்டல வரலாற்றுத் தேடல் குழு துணைச் செயலாளர் செல்வி. டாஃப்னி, "வரலாற்றுச் சின்னங்களை பாதுகாத்தலும், பராமரித்தலும்" என்கிற தலைப்பில் சோழமண்டல வரலாற்றுத் தேடல் குழு துணைச் செயலாளர் கபிலன் ராமராஜன் ஆகியோர் சிறப்பு உரையாற்றினர். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற கலைப் பண்பாட்டுத் துறை மண்டல உதவி இயக்குனர் ம. இராஜாராமன் மைய உரையாற்றி சிறப்பித்தார். பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் ச.சுபாஷ் நன்றியுரை நிகழ்த்தினார். சேக்கிழார் நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

பள்ளி, கல்லூரி, மாணவர்கள், சோழர் வரலாற்று ஆர்வலர்கள் என பெருந்திரலானோர் பங்கேற்றனர்.

இதுவரை 8 தேர்தல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளது!

செங்கோட்டையன், லீமா ரோஸ் வெற்றியை எதிர்த்து வழக்கு!

உயர் நீதிமன்றத்தில் விரைவில் விசாரணை!

சென்னை, ஜூன் 18 - கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில், தமிழக அமைச்சர் செங்கோட்டையன் வெற்றியை எதிர்த்து அ.தி.மு.க. வேட்பாளர் பிரபு சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளார். இதேபோல், லால்குடி தொகுதியில் வெற்றி பெற்ற லீமா ரோஸ் வெற்றியை எதிர்த்தும் தேர்தல் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் த.வெ.க. சார்பில் போட்டியிட்ட செங்கோட்டையன், தன்னை எதிர்த்து போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் நல்லசிவத்தை விட 16,620 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

செங்கோட்டையனின் வெற்றியை எதிர்த்து, கோபிசெட்டிப்பாளையம் அ.தி.மு.க. வேட்பாளர் பிரபு, சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளார். அவரது மனுவில், வேட்புமனுவில் சொத்து, குற்ற வழக்கு விவரங்கள் தெரிவிக்கும் பிரமாண பத்திரத்தில் தகவல்களை சான்றளித்து கையெழுத்திட்டுள்ள நோட்டரி வழக்கறிஞரின் உரிமம் காலாவதியாகி விட்டது.

அதனால், அந்த வேட்புமனுவை ஏற்றது முறையற்றது. எனவே, செங்கோட்டையன் வெற்றி பெற்றதை செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதேபோல, லால்குடி தொகுதியில், த.வெ.க. வேட்பாளரை விட 2,739 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏ. லீமா ரோசின் வெற்றியை எதிர்த்து, தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் பாரிவள்ளல் சார்பில் வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் வில்சன் உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், ஏழு நிறுவனங்களில் தனக்குள்ள பங்குகள் குறித்த விவரங்களை லீமா ரோஸ் மறைத்துள்ளார். அ.தி.மு.க. துண்டு அணிந்து கொண்டு தேவாலயங்களில் பிரசாரம் செய்துள்ளார். இதேபோல, புதுக்கோட்டை தொகுதியில் 1,867 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தி.மு.க. எம்.எல்.ஏ. முத்துராஜாவின் வெற்றியை எதிர்த்து த.வெ.க. வேட்பாளர் ஷெரீப் தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்குகள் விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது. இது வரை 8 தேர்தல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.